4. அரசினர் தீர்மானங்கள்

(அ) ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை விதி 13 (2)—ன்கீழ் ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“சட்டமன்றப் பேரவை விதி 13 (2)—ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளி வைத்து, இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற, திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஆ)—ன்கீழ் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

[2012 பிப்ரவரி 2

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து, இன்று (2–2–2012) பேரவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)–ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)

இல்லை, இல்லை. நான் பேசுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? Please sit down. (குறுக்கீடுகள்) Please sit down. அவையினுடைய மரபுப்படி பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்போது உறுப்பினர்கள் அனைவரும் உட்கார வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரியும். நான் நிற்கும்போது நீங்கள் நின்றால், அது சரியான மரபாகாது. இந்தச் செயலை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் குறுக்கே, குறுக்கே பேசிக்கொண்டிருந்தால், நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உரிமைக் குழுவினுடைய தலைவர் அவர்கள் ஓர் அறிக்கையை அவைக்கு அளித்திருக்கிறார்.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த பின்னர் அது அவையினுடைய சொத்தாகிறது. அதிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கருத்து சொல்ல உரிமை உண்டு. அவை உரிமைக் குழு முடிவு எடுக்கிறது. அந்த முடிவு

2012 பிப்ரவரி 2] *[திரு. ச. இராமச்சந்திரன்]*

இந்த அவையிலே பேரவை முன்னவர் மூலமாகத் தீர்மானமாக வருகிறது. தீர்மானம் என்று வந்தவுடன் அது இந்த அவையினுடைய சொத்தாகிறது. இந்த அவையினுடைய சொத்து என்கிறபொழுது அதிலே அனைவரும் தங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கு உரிமை உண்டு. அதை ஏன் இல்லை என்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமைக் குழு என்பது ஒரு தனிக் குழு. All party representation including opposition parties is there in that Committee. அந்தக் குழுவில் உறுப்பினர்கள் கருத்துச் சொல்லி, அதன் பிறகுதான் அந்தக் குழுவினுடைய அறிக்கை இங்கே வைக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

இன்று மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து, அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலும், அடுத்த சட்டமன்றக் கூட்டத்திலும் இன்றிலிருந்து தொடர்ந்து 10 நாட்கள் வரை அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கம் செய்யப்படுகிறார். இக்காலத்தில் திரு. விஜயகாந்த் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் வழங்கப்பட்டுள்ள எந்தவிதமான ஆதாயத்தையும், ஊதியத்தையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற முடியாது. *(குறுக்கீடுகள்)*

1–2–2012 அன்று அவைக்கு வந்திருந்து அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களது பதவியை, உரிமையை வருங்காலங்களில் முறைகேடாகப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டுமென்ற உத்தரவாதத்துடன், அவர்களை மன்னித்து, இனி பேரவையின் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் காப்பதற்கு உறுதுணையாக இருந்து, இதுபோன்ற சூழ்நிலை திரும்பவும் எழாது பார்த்துக்கொள்ள வேண்டும். தற்போது அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல், மேற்கொண்டு இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டால் கடுமையான தண்டனைக்கு ஆட்படவேண்டியிருக்கும் என்ற எச்சரிக்கையுடன் அவர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினை இத்துடன் விட்டுவிடப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

(தேசிய முற்போக்கு திராவிடக் கழக, திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)